# திருப்பத்தூர் நகராட்சி

2020 - ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 - ம் நாள் வியாழக்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம் தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் திருப்பத்தூர் நகராட்சி.
நாள். 20.02.2020

**பொருட்கள்**

**10)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**30322/2012/இ3**, நாள். **15.02.2020**–ல் தெரிவித்துள்ளபடி நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் கூடுதல் பணிகள் செய்ய 4வது தவணை தொகை ரூ.5,51,110/– நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம் நகராட்சி பங்கு தொகை ரூ.5,51,110/–ஐ மாநில நிதிக்குழு (SFC Account No. **1107882407**)–கணக்கிலிருந்து செலுத்தலாம்.

ந.க.எண்.1521/2013/E1

**11)** இந்நகராட்சியில் TURIP தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் **2019–2020**–ம் நிதியாண்டில் ரூ.**500.00** இலட்சம் மதிப்பீட்டில் **24** எண்ணம் பணிக்கு சிப்பம் **1** மற்றும் சிப்பம் எண் **2** தார் சாலை அமைக்கம் பணிக்கு **20.01.2020**–ம் தேதி PRICE BID திறக்கப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கணக்கிட்டதில் சிப்பம் எண் **1**–ல் திரு. எஸ். குணசேகரன் என்பவர் **4.77%** சதவீதம் மதிப்பீட்டை விட கூடுதல் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். அதனை மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு உட்பட்டு செய்து கொடுக்க (NEGOTIATION) கடிதம் அனுப்பப்பட்டது. அதனை ஏற்று மேற்படி கட்டுமான பொருட்கள் அனைத்தும் வெளி மார்க்கெட்டில் அதிகமாக உள்ளதால் அதனை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். சிப்பம் எண் **2** பணிக்கு M/s Excel Engineering Jolarpet என்பவர் **19.14%** சதவீதம் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இதற்கு கூடுதலாக 10 % சதவீதம் அதாவது 25,00,000/–யினை 7 நாட்களுக்கு செலுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் ஒப்பந்ததாரர் கூடுதல் வைப்புத் தொகையினை செலுத்தாத காரணத்தால் சிப்பம் 2 ஒப்பந்தப்புள்ளியினை M/s Excel Engineering Jolarpet ரத்து செய்யலாம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** சிப்பம் எண் 1 ல் கட்டுமான பொருட்கள் அனைத்தும் வெளி மார்க்கெட்டில் அதிகமாக உள்ளதாக ஒப்பந்ததாரர் தெரிவித்தினை ஏற்று மதிப்பீட்டை விட கூடுதல் 4.77% சதவீதம் ஏற்கலாம்.

**3)** சிப்பம் எண் 1 ற்கு வைப்புத் தொகை 1% சதவீதம் ஒப்பந்ததாரர் செலுத்திய பின்னர் பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**4)** சிப்பம் எண் 2 கூடுதல் வைப்புத் தொகை10% சதவீதம் ஒப்பந்ததாரர் செலுத்தாத காரணத்தால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளியினை ரத்து செய்யவும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்1178/2019/இ1

# <u>திருப்பத்தூர் நகராட்சி</u>

2020 - ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 - ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம்
திருப்பத்தூர்
நாள். 28.02.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.

**பொருட்கள்**

**12)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி **2019–2020–ம்** நிதியாண்டின் கீழ் பணி செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்களின் செயல்முறை உத்தரவு கடிதம் ந.க.எண்.அ2/1646/2019 நாள்.11.02.2020 வரப்பெற்றுள்ளது வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | Providing 110mm PVC water supply distribution pipe line to Aariff Nagar ward No.32 in Tirupattur Municipality | **9.70 இலட்சம்** |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1521/2013/E1

**13)** இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 32 குள்ளாச்சாரி வட்டம், திருமால் நகர் மற்றும் ஆரிப் நகர் பகுதியில் உள்ள பவர் பம்ப் பழுதடைந்து இப்பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் வழங்க இயலவில்லை. இதனை தவிர்க்கும் பொருட்டு குள்ளாச்சாரி வட்டம், திருமால் நகர் பகுதிக்கு செல்லும் பவர் பம்ப் முறையே 7.5 எச்.பி., 5 எச்.பி மின்மோட்டார் புதியாதாக மாற்றி அமைத்தல் பணியும் ஆரிப் நகர் பகுதிக்கான பவர்பம்ப் 7.5 எச்.பி மின்மோட்டாரில் காயில் கட்டி பழுது பார்த்தல் பணி செய்ய வேண்டி உள்ளது. எனவே இதற்குண்டான மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்காலம்.
2. மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சம் தொகையினை குடிநீர் நிதி 2019– 2020–ல் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**14)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 29 கௌதமபேட்டை பொதுகழிப்பிடம் எதிரில் (அரசு சந்தன குடோன் எதிரில்) 3 எண்ணிக்கையிலான பூ மரங்கள் முற்றிலும் காய்ந்து கீழே விழுந்து பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட பகுதியில் உள்ள 3 எண்ணிக்கையிலான பூ மரங்களை பொது ஏலத்ததில் வைத்து அப்புறப்படுத்தவும் அதற்குண்டான உத்தேச செலவீனத் தொகை ரூ. 1000/–த்தில் பணிகள் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்காலம்.
2. மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீடு தொகை ரூ. 1000/– தொகையினை பொது நிதி 2019– 2020–ல் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**15)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் நகராட்சியின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீரில் Chlorination திரவம் கலந்து சுத்திக்கரிக்கப்பட்ட சுத்தமான குடிநீர் பொது மக்களுக்கு விநியோகம் செயதிட`. எனவே பொது மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு தொகை ரூ.**9.90** இலட்சம் மதிப்பீட்டில் Chlorination திரவியம் வாங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்காலம்.
2. மேற்படி பணிக்கு உண்டான மதிப்பீடு தொகை ரூ. **9.90** இலட்சம் தொகையினை குடிநீர் நிதி **2019– 2020–**ல் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**16)** திருப்பத்தூர் நகராட்சியில் இரண்டு தட்டச்சர்கள் Outsourcing முறையில் 12.10.2019-ம் தேதி முதல் 12.01.2020 தேதி முடிய மூன்று மாத காலத்திற்கு மட்டும் அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ் நிறுவனம், வாணியம்பாடி அவர்களின் ஒப்பந்தத்தின் மூலமாக பணிபுரிந்து வருகின்றனர். மேலும், தற்பொழுது 13.01.2020 முதல் 12.04.2020 வரை மூன்று மாத காலத்திற்கு மீண்டும் நீட்டிப்பு செய்யவும் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர், வேலூர் அவர்களின் விலை விகிதத்தத்தின்படி ஊதியம் வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**அலுவலக குறிப்பு**</u>

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1397/2018/சி1)

**17)** திருப்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் வி.கே.காண்ட்ராக்டர்ஸ் நிறுவனத்தின் மூலம் 115 துப்புரவு பணியாளர்களை கொண்டு 01.03.2019 முதல் 28.02.2020 வரை ஓராண்டு காலத்திற்கு திடக்கழிவு பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.2356/2018/எச்1, நாள்.27.02.2019-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டதன்படி, 09.03.2019 முதல் திடக்கழிவு பணிகள் மேற்கொண்டு வந்தனர். வி.கே.காண்ட்ராக்டர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 28.02.2020-ல் முடிவடைகிறது. எனவே, 29.02.2020 முதல் மறு உத்தரவு வரும் வரை பொது சுகாதார நலன் கருதி, மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் 99 துப்புரவு பணியாளர்களை கொண்டு திடக்கழிவு பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி பணி உத்தரவில் குறிப்பிட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

பொது சுகாதார பணிகளின் அவசியம் கருதி, 29.02.2020 முதல் மறு உத்தரவு வரும் வரை வி.கே.காண்ட்ராக்டர் நிறுவனத்தின் மூலம் 99 துப்புரவு பணியார்களை கொண்டு திடக்கழிவு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(**ந.க.எண்.**2356/2018/எச்1)

18) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி 2019–2020–ம் நிதியாண்டின் கீழ் பணிகள் செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வேலூர் அவர்களின் செயல்முறை உத்தரவு கடிதம் ந.க.எண்.அ2/1646/2019 நாள்.11.02.2020 கடிதம் வரப்பெற்றுள்ளது வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பகிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | Providing black top surface Road to TNHB phase-1 ward No.34 in Tirupattur Municipality | 16.00 இலட்சம் |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1521/2013/E1